இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 23-10-2024

# மோடி, தமிழை வளர்க்கிறாரா?

சூரியனைக் கை கொண்டு மறைப்பதைப் போல, தான் கலந்து கொண்ட மேடையில் ஒலிக்கப்பட்ட தமிழ்த்தாய் வாழ்த்தில் ‘திராவிடம்’ என்ற சொல்லை நீக்கி தனது மன அரிப்பைத் தீர்த்துக் கொண்ட ஆளுநர் ஒரு அறிக்கையை விடுத்துள்ளார். அதில், ‘மோடி தமிழை வளர்த்து வருகிறார்’ என்று சொல்லி இருக்கிறார். அது எந்தத் தமிழை என்றுதான் தெரியவில்லை.

“பிரதமர் மோடி தலைமையில் மத்திய அரசு பல்வேறு அமைப்புகளை நிறுவி தமிழ் மொழி மற்றும் அதன் பாரம்பரியத்தை தமிழ்நாடு உள்பட இந்தியாவுக்கு உள்ளேயும் உலகின் பல நாடுகளிலும் பரப்புகிறது என்பதையும் முதலமைச்சர் நன்றாக அறிவார். பிரதமர் மோடி, ஐக்கிய நாடுகள் சபைக்கும் கூட தமிழைக் கொண்டு சென்றார். ஒரு பெருமைமிகு இந்தியன் என்ற முறையில், நாட்டின் தொன்மையான, வளமான மற்றும் உயிர்ப்புமிக்க மொழியான தமிழை நாட்டின் பிற மாநிலங்களில் பரப்ப நான் ஏராளமான முயற்சிகளைச் செய்துள்ளேன்.” என்று ஆளுநர் ரவி சொல்லி இருக்கிறார்.

**தமிழை வளர்ப்பதற்கு பல்வேறு அமைப்புகளை மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு செய்து வருவதாகச் சொல்கிறாரே தவிர, அது என்ன அமைப்புகள் என்பதைச் சொல்ல வேண்டாமா? இவர்கள் ஏனோ தானோ என்று வெறுப்பாக நடத்தி வரும் செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் கூட, தலைவர் கலைஞரால் உருவாக்கப்பட்ட அமைப்பு தானே தவிர, பா.ஜ.க. உருவாக்கிய அமைப்பு அல்ல. அந்த அமைப்பையும் சிதைக்கத்தானே நினைத்தார்கள். இப்போதும், ‘உள்ளே புகுந்து’ கெடுக்கும் காரியங்கள்தானே நடந்து கொண்டு இருக்கிறது?**

செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தையே மூடத் திட்டமிட்ட அரசுதான் பா.ஜ.க. அரசு. சென்னையில் தனித்து இயங்கிய அந்த நிறுவனத்தை மைசூர் பல்கலைக் கழகத்துடன் இணைக்க பா.ஜ.க. அரசு திட்டமிட்டது. தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்த பிறகுதான் அந்த முடிவை ஒத்தி வைத்தார்கள்.

செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் ஏதேனும் ஒரு பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்படும் என்று புதிய கல்விக் கொள்கையில் இருக்கிறது. அதாவது, புதிய தேசிய கல்விக் கொள்கை ஆவணத்தில், “அனைத்து செம்மொழி ஆராய்ச்சி நிறுவனங்களும் பல்கலைக் கழகங்களுடன் இணைக்கப்படும்; அதே நேரத்தில், பல்கலைக்கழகத்திற்குள் அவை தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்பட அனுமதிக்கப்படும்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்படிச் சொல்லி தனித்து சென்னையில் இயங்கும் நிறுவனத்தை காலி செய்யப் பார்த்தார்கள்.

2017ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தை திருவாரூரில் உள்ள மத்திய பல்கலைக் கழகத்தின் ஒரு துறையாக இணைக்க பா.ஜ.க. அரசு திட்டமிட்டிருப்பதாக செய்திகள் வெளியாகின. இதற்கு அப்போதும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. அதன் பிறகு தான் பின் வாங்கினார்கள்.

அந்த அமைப்பையாவது முறையாக நடத்தினார்களா என்றால் இல்லை.

2008-ஆம் ஆண்டு மே 19 முதல் செம்மொழி தமிழாய்வு நிறுவனமாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது முயற்சியால் செயல்பட்டு வருகிறது. 2011 கழக ஆட்சி முடிவுற்ற நிலையில் இருந்து, அதனை செயல்படாத அமைப்பாக மாற்றி வைத்திருந்தார்கள்.

செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் சார்பில் ஆண்டுதோறும் தமிழ் அறிஞர்களுக்கு விருதுகள் வழங்க வேண்டும். இதில் ஒன்றிய அரசால் மூன்று வகையான விருதுகள் குடியரசுத் தலைவரால் வழங்கப்பட வேண்டும். ‘கலைஞர் கருணாநிதி செம்மொழி தமிழ் விருது’ பின்லாந்து அறிஞர் அஸ்கோ பர்போலோவுக்கு 2010 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. அதன்பிறகு பத்து ஆண்டுகளாக யாருக்கும் வழங்கப்படவில்லை.

2011 - 16 வரையிலான ஆண்டுக்கான விருது அறிவிப்பு 2017-இல் வெளியானது. 2020 ஏப்ரலிலும் விருது அறிவிப்பு வெளியானது. இதற்கான மனுக்கள் பெறப்பட்டாலும் விருதுகள் வழங்கப்படவில்லை. **“மத்திய அரசின் கீழ் செயல்படும் தமிழாய்வு நிறுவனத்துக்கு நிரந்தர இயக்குநரை நியமிப்பதில் 14 ஆண்டுகள் காலதாமதம் ஏற்பட்டது. இதனால் விருதுப்பணிகளும் முடங்கிவிட்டன”** என்று மத்திய கல்வி அமைச்சக அதிகாரிகள் இதற்குக் காரணம் சொன்னார்கள்.

2011 முதல் 2019ஆம் ஆண்டு வரையிலான விருதுகள் வழங்கப்படவே இல்லை. பத்து ஆண்டுகள் அந்த விருதை யாருக்கும் வழங்கவே இல்லை. கழக அரசு பொறுப்பேற்றவுடன் விருதாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 22.01.2022 அன்று நடைபெற்ற விழாவில் பரிசுகள் அளிக்கப்பட்டன. இதுதான் இவர்கள் தமிழை வளர்க்கும் லட்சணம் ஆகும்.

ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் அமைக்கப்பட்டுள்ள ஆட்சி மொழிக்கான நாடாளுமன்ற நிலைக்குழு, மொத்தம் 112 பரிந்துரைகள் கொண்ட 11ஆவது அறிக்கையை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி இருக்கிறது.

**கல்வி நிறுவனங்களில் பயிற்று மொழியாக இந்தி நிச்சயம் இடம் பெற வேண்டும், கல்லூரிகளில் ஆங்கிலத்துக்குப் பதில் இந்தியைக் கொண்டு வர வேண்டும், போட்டித் தேர்வுகளில் கட்டாய ஆங்கில மொழி வினாத்தாள் நிறுத்தப்பட வேண்டும், இந்தியில் பணிபுரியாத அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் எச்சரிக்கப்பட வேண்டும், ஒன்றிய அரசின் பணியாளர் தேர்வில் தேர்வாளர்களின் இந்தி மொழி அறிவை உறுதி செய்ய வேண்டும் - இப்படி இந்திய மயமாகவே இருக்கிறது அந்த அறிக்கை. இதில் எங்கே இருக்கிறது தமிழ் வளர்ச்சி?**

“சமஸ்கிருதம், மும்மொழிப் பாடத்திட்டத்தின் ஒரு மொழியாகப் பள்ளிக் கல்வித் திட்டத்தின் எல்லா நிலைகளிலும், கல்லூரிகளிலும் ஒரு முக்கியமான வளமூட்டக் கூடிய விருப்பப் பாடமாக வழங்கப்படும்” என்கிறது இவர்களது புதிய கல்விக் கொள்கை. இதில் எங்கே இருக்கிறது தமிழ் வளர்ச்சி?

**தமிழ்நாட்டு ஆளுநர் மாளிகையில் உட்கார்ந்து கொண்டு - தமிழ்நாட்டு மக்களை எரிச்சல் படுத்தும் நோக்கத்தோடு மட்டும் தினமும் செயல்பட்டுக் கொண்டிருப்பதை சகித்துக் கொண்டிருக்க வேண்டுமா இனியும்?**

●●




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.10.2024) சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில், முரசொலி செல்வம் அவர்களின் படத்திறப்பு – புகழ் அஞ்சலி நிகழ்ச்சியில் தலைமையுரையாற்றினார். உடன், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், இந்து குழுமத்தின் இயக்குநர் என்.ராம், திரைப்பட நடிகர் சத்யராஜ், பேராசிரியர் மு.நாகநாதன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் நிருவாகிகள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் வழிகாட்டுதலில் – தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

# பொதுமக்கள் ஊர்களுக்குச் செல்ல வசதியாக - 14,086 பேருந்துகள் இயக்கம்!

## போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவிப்பு!

சென்னை, அக். 23 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில், 2024 - தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, பொது மக்கள் தங்களின் சொந்த ஊர்களுக்குச் செல்வதற்கு வசதியாக, 14,086 பேருந்துகள் இயக்கப்படுகிறது என போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், 2024 ஆம் ஆண்டு வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, போக்குவரத்துத் துறையின் சார்பில் மேற்கொள்ளப்படும் சிறப்பு ஏற்பாடுகள் மற்றும் சிறப்பு பேருந்துகள் இயக்கம் குறித்த ஆலோசனைக் கூட்டமானது, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில், நேற்று முன்தினம் (21-10-2024) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் போக்குவரத்துத் துறையை சார்ந்த அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, போக்குவரத்துத் துறை ஆணையர், காவல் துறை உயர் அலுவலர்கள், அரசுத் துறை அலுவலர்கள் மற்றும் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

போக்குவரத்துத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, வரும் 28-10-2024 முதல் 30-10-2024 வரையில், சென்னையிலிருந்து தினசரி இயக்கக் கூடிய 2,092 பேருந்துகளுடன், 4,900 சிறப்புப் பேருந்துகள் என மூன்று நாட்களுக்கும் சேர்த்து ஒட்டு மொத்தமாக, 11,176 பேருந்துகளும், பிற ஊர்களிலிருந்து மேற்கண்ட மூன்று நாட்களுக்கு 2,910 சிறப்பு பேருந்துகள் என மொத்தமாக 14,086 பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

தீபாவளி பண்டிகை முடிந்த பின்னர், பிற ஊர்களிலிருந்து சென்னைக்கு, வரும் 02/11/2024 முதல் 04/11/2024 வரையில், தினசரி இயக்கக் கூடிய 2,092 பேருந்துகளுடன் 3,165 சிறப்புப் பேருந்துகளும் மூன்று நாட்களும் சேர்த்து ஒட்டுமொத்தமாக 9,441 பேருந்துகள் ஏனைய பிற முக்கிய ஊர்களிலிருந்து பல்வேறு ஊர்களுக்கு 3,165 சிறப்பு பேருந்துகள் என மொத்தமாக 12,606 பேருந்துகளும் இயக்கப்படுகின்றன.

### வழித்தட மாற்றம் கார் மற்றும் இதர வாகனங்கள்!

கார் மற்றும் இதர வாகனங்களில் செல்வோர், போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, தாம்பரம், பெருங்களத்தூர் வழியாக செல்வதை தவிர்த்து (OMR) திருப் போரூர் செங்கல்பட்டு அல்லது வண்டலூர் வெளிச் சுற்று சாலை வழியாக செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### பயணிகளின் வசதிக்காக 24x7 கட்டுப்பாட்டு அறை

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளின் இயக்கம் குறித்து அறிந்து கொள்வதற்கும் மற்றும் இயக்கம் குறித்து புகார் தெரிவிப்பதற்கு ஏதுவாக, 94450 14436 என்ற தொலைபேசி எண்ணை (24x7) மணி நேரமும் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூல் செய்தல் உள்ளிட்ட புகார்களுக்கு 1800 425 6151 (Toll Free Number) மற்றும் 044 24749002, 04426280445, 04426281611 என்ற தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதுமட்டுமின்றி, பயணிகளின் நலன் கருதி, கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறை (Control Room) 24 மணி நேரமும் செயல்படும்.

மேலும், பேருந்து நிலையங்களுக்கு வருகை தரும் பயணிகள் பேருந்து மற்றும் வழித்தடம் குறித்த விவரங்களை அறிந்து கொள்ள ஏதுவாக பல்வேறு இடங்களில் தகவல் மையங்கள் (May I Help You) அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் சிரமமின்றி பயணிக்க முன்பதிவு வசதியினை பயன்படுத்தி பாதுகாப்பான முறையில் பயணம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இணைப்புப் பேருந்துகள்

பொதுமக்களின் வசதிக்காக கோயம்பேடு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையத்திலிருந்து மேற்கூறிய 2 பேருந்து நிலையங்களுக்கு செல்ல ஏதுவாக மாநகர் போக்கு வரத்துக் கழகத்தின் சார்பில் இணைப்புப் பேருந்துகள் 24 மணி நேரமும் இயக்கப்படும்.

இவ்வாறு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் குறிப்பிட்டார்.

### புதுக்கோட்டை மாவட்டம் - கறம்பக்குடியில்

# 300 மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்!

புதுக்கோட்டை, அக். 23 -

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் 21.10.2024 அன்று வழங்கினார்.

பின்னர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது: -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணாக்கர்கள் கல்வியில் சிறந்து விளக்கிட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அதனடிப்படையில் இல்லம் தேடி கல்வித் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், எண்ணும் எழுத்தும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு கல்வித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் 300 மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது.

அதன்படி, கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், கறம்பக்குடி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 100 மாணவர்களுக்கும், கறம்பக்குடி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 200 மாணவிகளுக்கும், என ஆகமொத்தம் 300 மாணாக்கர்களுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது.

எனவே தமிழக அரசின் மூலம் வழங்கப்படும் இந்த விலையில்லா மிதிவண்டிகளை பெற்றுக்கொண்ட மாணாக்கர்கள் அனைவரும் இதனை நாள்தோறும் பள்ளிக்குச் சென்று வருவதற்கு பயன்படுத்தி தங்களது உடல்நலத்தை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, அறந்தாங்கி மாவட்ட கல்வி அலுவலர் (பொ) க.ஜெயந்தி, ஒன்றியக்குழுத் தலைவர்கள் மாலா ராஜேந்திரதுரை (கறம்பக்குடி), மகேஸ்வரி சண்முகநாதன் (அறந்தாங்கி), பள்ளிக்கல்வி துணை ஆய்வாளர் மு. இளையராஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (21.10.2024) போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் 2024ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, போக்குவரத்துத் துறையின் சார்பில் மேற்கொள்ளப்படும் சிறப்பு ஏற்பாடுகள் மற்றும் சிறப்பு பேருந்துகள் இயக்கம் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் போக்குவரத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திரரெட்டி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, போக்குவரத்துத் துறை ஆணையர் சுன்சோங்கம் ஜடக் சிரு, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர். ஆல்பி ஜான் வர்கீஸ், அனைத்து போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள் மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள், அரசுத் துறை உயர் அலுவலர்கள் மற்றும் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.